CAMPUS ... UNIVERSITY
PERIODICALS DIVISION
1979-4-06 RECEIVED
... LANKA · JAFFNA

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
## The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 பங்குனி 22 ஜ—அவ் 9 இதழ்: 53
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-4-79

# கொடூரமான தண்டனை!
## 'அமிர்' கண்டனம்

[கொழும்பு]
"பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் சூல்பிகார் அலிபூட்டோ தூக்கிலிடப்பட்டது; கடந்த காலத்தின் அரசியல் குற்றங்களுக்காக வழங்கப்படும் தண்டனைகளில் மிகவும் பயங்கர மாற்றமொன்றை எடுத்துக் காட்டுகிறது' என்று எதிர்க் கட்சித் தலைவர்' திரு. அ. அமிர்தலிங்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் மேலும் தெரிவித்ததாவது: "நாஸியுத்தக் குற்றவாளிகளில், நியூரம்பர்க் விசாரணையின் பின்னர் கடும் தண்டனை பெற்ற சிலர் இன்றும் உயிருடன் சிறைகளில் இருப்பதை நினைக்கும்போது; பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோவுக்கு வழங்கப்பட்ட தண்டனையின் மிகக் கொடூரதன்மையை எவரும் வெறுக்கவே வேண்டியிருக்கிறது" (ம)

### உற்சவம்

(யாழ்ப்பாணம்)
வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமான் கோவிலில் இன்றுமாலை ஸ்ரீராமநவமி உற்சவம் நடைபெறவுள்ளது, உற்சவத்தையொட்டி விசேட அபிஷேகங்களும் ஆராதனைகளும் ஏற்பாடாகியுள்ளன.

உலகத்தலைவர்களின் ஒருமனதான கோரிக்கையும் புறக்கணிக்கப்பட்டு

# ஜுனப் சூல்பிகார் அலிபூட்டோ நேற்று தூக்கிலிடப்பட்டார்!

## தலைவர்கள்கண்டனம்; பரவலாக ஆர்ப்பாட்டம்!

**பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவருமான ஜனுப் சூல்பிகார் அலி பூட்டோ, நேற்று அதிகாலை (இலங்கைநேரப்படி)2-30க்கு காலம் நேரம் அறிவிக்கப்படாமல் திடுதிப்பென ராவல்பிண்டி சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார். இவரது பூதவுடல் இராணுவ விமானத்தில் எடுத்துச்செல்லப்பட்டு, நேற்றுக்காலை 10-30 மணியளவில் சிந்துமாகாணத்திலுள்ள அவரது சொந்த ஊரான லர்க்கானாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இறுதிச்சடங்குகளில் ஜனுப் பூட்டோவின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்டதாக பாகிஸ்தான் வானொலி நேற்றிரவு அறிவித்தது.**

ஜனுப் சூல்பிகார் அலி பூட்டோவுக்கு மன்னிப்பு வழங்குமாறு ஐக்கியநாடுகள் பொதுச் செயலாளர் திரு. வால்ட்ஹெய்ம், மற்றும் பாகிஸ்தானின் நெருங்கிய அரபுநாடுகள் உட்பட உலகநாடுகளின் பல தலைவர்கள் ஒருமனதாக விடுத்திருந்த கோரிக்கையை முற்றாக நிராகரித்த பாகிஸ்தான் இராணுவ நிர்வாகி ஸியா வுல் ஹக், உலக மக்களுக்கு அறிவிக்காமலேயே, பாகிஸ்தான் மக்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அகால வேளையில், தமது உத்தரவை இரகசியமாக வழங்கி, பூட்டோவின் 'கதை'யை முடித்து விட்டார்! ஜனுப் பூட்டோ தூக்கிலிடப்பட்டார் என்ற செய்தி நேற்று காலையில்தான், பாகிஸ்தான் வானொலி மூலம் பாகிஸ்தான் மக்களுக்குத் தெரியவந்தது

### உலகத் தலைவர்கள் கண்டனம்; பரவலாக ஆர்ப்பாட்டம்!

ஜனுப் பூட்டோ நேற்று தூக்கிலிடப்பட்டார் என்ற செய்தி வெளியானதும் உலகத்தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்தனர். பாகிஸ்தானின் சில பகுதிகளிலும் பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரிலும் பரவலாக நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற போதிலும், நாடுமுழுவதிலும் இராணுவம் உஷார் படுத்தப்பட்டுள்ளது விமான நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவித்தன பூட்டோ கல்வி பயின்ற லண்டனிலும், மற்றும் பல வெளிநாடுகளின் தலைநகர்களிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றன.

### மன்னிப்பு கேட்க மறுத்தவர்

முன்னாள் பிரதமர் சூல்பிகார் அலி பூட்டோ. பாகிஸ்தான் இராணுவ நிர்வாகி ஸியாவுல் ஹக்கிடம் கடைசி நேரம்வரை மன்னிப்புக் கேட்காததும், 'செய்யாத குற்றத்துக்காக நான் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பூட்டோ மீண்டும் மீண்டும் தமது வழக்கறிஞர்கள் மூலம் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

51வயதான ஜனுப் பூட்டோவின் மரணதண்டனையும் நல்லடக்கமும் அந்தரங்கமாகவே மேற்கொள்ளப்பட்டன.

கொலைக்குற்றச்சாட்டின் பேரில் ஜனுப் பூட்டோவுடன் மரணதண்டனை விதிக்கப்பட்ட மற்றும் நான்கு பேரும் தூக்கிலிடப்படவில்லை.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர் ஜனுப் பூட்டோவின் பூதவுடல் விசேட இராணுவ விமானத்தில் லர்க்கானாவுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அவரது உறவினர்கள் முன்னிலையில் (அடக்கம் செய்யப்பட்டது. பூதவுடலை எடுத்துச்சென்ற சமயம் இஸ்லாமாபாத் விமானநிலையத்திலும் சிந்துமாகாணத்தில் உள்ள சுக்கூர், லர்க்கானாவிமானநிலையங்களிலும் பலத்த இராணுவ காவல் போடப்பட்டிருந்தது.

1928ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் திகதி சிந்துமாகாணத்தில் பிறந்த ஜனுப் பூட்டோ முதலில் பம்பாயிலும் பின்னர் அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும் பின்னர் லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றார்.

1967ம் ஆண்டு மக்கள் ஜனநாயகக் கட்சியை உருவாக்கிய ஜனுப் பூட்டோ 1971ம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்துசென்றபோது பாகிஸ்தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்

77ம் ஆண்டு ஜனுப் பூட்டோவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது 77ம் ஆண்டு மார்ச் மாதம் கைதுசெய்யப்பட்ட ஜனுப பூட்டோமீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டது.

ஜனுப் பூட்டோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட செய்தி தம்மைத் திடுக்கிட வைத்தது என்று அவரது மூத்த புதல்வர் லண்டனில் தெரிவித்தார்.

ஜனுப் பூட்டோவின் இரு புதல்வர்களும் லண்டனில் கல்விகற்றுவருகின்றனர்.

ஜனுப் பூட்டோவின் மனைவியும் மகளும் ராவல்பிண்டியில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [இ]

### ரயில் சேவை பாதிப்பு

[யாழ்ப்பாணம்]
வடபகுதி ரயில்சேவை இன்று அதிகாலைவரை சீரடையவில்லை

ரயில்சேவை மீண்டும் நாளை சீரடையலாமென்று யாழ் புகையிரத நிலைய அதிகாரியொருவர் நேற்றிரவு 'ஈழநாடு'விடம் தெரிவித்தார் கொழும்பு செல்லும் பிரயாணிகள் கிளிநொச்சிவரை ரயிலில் சென்று, பின்னர் மாங்குளம் வரை விசேட பஸ்ஸில் சென்று பயணத்தை தொடர முடியும். யாழ் தபால் சேவை மாங்குளம் வரை விசேட தபால் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு, மாங்குளத்திலிருந்து ரயில் மார்க்கமாக அனுப்பப்படுகின்றன. (கே)

துப்பாக்கிமுனையில்

# சிகரெட் சைக்கிள் கொள்ளையடிக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)
நேற்றுக் காலை பதினொரு மணியளவில் திருநெல்வேலியில் 'சிகரெட் சைக்கிள்' துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டது!

யாழ்ப்பாணத்திலுள்ள சிகரெட் விநியோக ஸ்தாபனமொன்றுக்குச் சொந்தமான சைக்கிளில் சென்ற ஆறுபகப் கந்தையா திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் இனம் தெரியாத மூவரினால் இடைமறிக்கப்பட்டு, சிகரெட் விற்பனையாளரிடமிருந்து சுமார் ஐநூறு ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது,

தாம் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, எதிர்த்

[6ம் பக்கம் பார்க்க]

## "ஈழத்தமிழருக்காக நான் குரல் எழுப்புவேன்"
### பிரிட்டிஷ் பத்திரிகையாளர்

(யாழ்ப்பாணம்)
"சுயநிர்ணய உரிமை கோரிப் போராடும் ஈழத்தமிழருக்கு பிரித்தானியாவிலும் மற்றும் நாடுகளிலும்நான்குரல் எழுப்புவேன்" என்று பிரித்தானிய பத்திரிகை ஆசிரியர் றொஜர் சில்வர்மன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ் ஆனைப்பந்தி உயர்கல்விக் கல்லூரியில் திரு அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற புதிய சமசமாஜக் கட்சிக் கூட்டத்தில் திரு. றொஜர் பேசும்போது கூறியதாவது:

"ஈழத்தில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் ஒடுக்கப்பட்ட இனமாக நசுக்கப்பட்டு வாழுகின்றார்கள் அவர்கள் தங்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்றார்கள்; இவர்களின் நீதி போராட்டத்திற்கு பிரித்தானியாவில் உள்ள "மிலிடன்ட்" எனது பத்திரிகைமூலப் பிரசாரம் உலகறியச் செய்வேன் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமை போராட்டத்திற்குஎமது புதிய சமசமாஜக்கட்சி என்றும் ஆதரவு நல்கு

"நான் இன்று உலகத்தில் மிகவும் தொல்லைபட்டுக் கொண்டிருக்கும் தீவில் வாழும் மக்கள் மத்தியில் நின்று பேசிக்

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

2 இரும்பு அச்சுகள் 6½ அடி 4x4'' விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்;- P. சிறிநடராஜ், சி. வி. பாட், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2065

### கல்வி

வீடுகள் சென்று ஆங்கில இலக்கியம், இலக்கணம் (Emma, Mc Beth, Poetry) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக்கொடுக்கப் படும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1962 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1962

### பயிற்சி

குளிர்ப்படுத்தல் முறைகள் விரைவாகவும் இலகுவாகவும் கற்றுத் தரப்படும். வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு இலகுவான வழி. 11-4-79ல் பயிற்சிகள் ஆரம்பம். I.A.R 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2030

கட்டட மேற்பார்வையாளர் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சிகள் 11-4-1979 ல் ஆரம்பம் I.A.R. 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2029

### பயிற்சி

மோட்டார் மெக்கானிக் டிப்பிளோமா 3 மாத பயிற்சி 10-04-1979 ஆரம்பமாகவுள்ளது- இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி- 11/B மொங்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2075

### தவறிவிட்டதா?

நல்லூர் சங்கிலியன் சிலைக்கு அண்மையில் எம்மால் கண்டெடுக்கப்பட்டுள்ள பணப்பை (சுமார் ஆயிரம் ரூபா) ஒன்று எம்மிடம் உள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும். வி. கே. மகாலிங்கம், ஸ்ரீ முருகன் நெசவு நிலையம், 19, முருகேசர் லேன், நல்லூர். 2074

### WANTED

A Person to make a Complete Survey of Palmyrah Leaf handicraft industry in Jaffna province.

Duration of employment: one month (Possible permanency later)

Qualifications: Good proficiency in English, some experience of palmyrah products, age 20—35 years

Please call personally on

OLLE HAEGGBLOM,
ST. ANTONYS ROAD,
PANDATHERIPPU.

on the 6 th of April at 8-30 a. m. 2064


## கேள்வி விளம்பரம்

அச்சுவேலி கிராமாட்சி மன்ற நிர்வாக உத்தியோகத்தர் அவர்களால் பின்வரும் வேலைகட்கு பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது.

| | பத்திரப் பணம் | பிணைப் பணம் |
|---|---|---|
| 1. 13-ம் வட். அரசடி தொழிற் பேட்டை வீதி. | 10-00 | 100/- |
| 2. காளி கோவில் ஒழுங்கை | 10-00 | 100/- |
| 3. ஆஸ்பத்திரி வீதி, | 10-00 | 100/- |
| 4. பத்தமேனிப்பிள்ளையார் கோவில் வீதி | 10-00 | 100/- |
| 5. அச்சுவேலி பிள்ளையார் கோவில்வீதி | 10-00 | 100/- |
| 6. கொன்னையன் தூவு பாலம் அமைத்தல் | 10-00 | 200/- |
| 7. அச்சுவேலி கிராமசபை மதில் கட்டுதல் | 5-00 | 100/- |
| 8. அச்சுவேலி ஆயுள்வேத வைத்திய நிலையம் திருத்த வேலை | 5-00 | 50/- |
| 9 அச்சுவேலி உபமின்நிலைய அறைகட்டுதல் | 5-00 | 50/- |
| 10. அச்சுவேலி மீன்சந்தை தளம் திருத்த வேலை | 5-00 | 50/- |
| 11. அச்சுவேலி கிராமசபை வெள்ளை அடித்தல் | 5-00 | 50/- |

மேற்குறிப்பிட்ட விபரப்படி மீளளிக்கப்படாத பத்திரப் பணமும் கேள்விப்பிணைப் பணமும் செலுத்தியதன் பேரில் 17-4-79ம் திகதி மாலை 2-00 மணிவரை வழங்கப்படும் உத்தியோகபூர்வ கேள்விப்பத்திரத்தினைப் பூர்த்தி செய்து 18-4-79 காலை 11-00 மணிக்குமுன் எனக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்பட வேண்டும். அதேநேரத்தில் கேள்வியின் பிரதியொன்று யாழ். பிர. உ. உ. ஆணையாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும். குறித்த நேரத்திற்குப் பின்கிடைக்கும் கேள்விகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நீ. ப. ஜெகநாதன்,
நிர்வாகஸ்தர்.

கிராமசபை அலுவலகம்,
அச்சுவேலி, 30-3-79. 2068


உடனுக்குடன் கோப்பியை
அரைத்துக்கொள்ளும் நவீன இயந்திரம்
விற்பனையாகின்றது

மினி கோப்பி கிறைண்டர்
MINI COFFEE GRINDER
WITH MOTOR AND SWITCH
சிறிய கையிருப்பேயுண்டு

வடஇலங்கை மக்கள், எதுவேண்டுமோ
நாடவேண்டிய நயமான ஸ்தாபனம்

முகமதலி அப்துலலி,
5 - 7, பெரியகடை - யாழ்ப்பாணம்.
போன்: 515


## இன்று கொடியேற்றம்

நயினாதீவு, செம்மணத்தம் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் மகோற்சவ விழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இம்மாதம் 15ம் திகதிவரை நடைபெறவுள்ளது. 14ம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். (கு)

## நடைபெறும் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். கிளையின் வெளிக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை ஐக்கிய விளையாட்டுக்கழக மண்டபத்தில் திரு. வி. ஞானசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (கு)

## மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இடைக்காடு சனசமூக நிலையத்தினால் மின்னொளியில் நடாத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 22-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான விளையாட்டுக் குழுக்களும் சனசமூக நிலையங்களுமாக எண்பதுக்கு மேற்பட்ட குழுக்களாக 6 பேர், 4 பேர், 'ஓவர்' ஆட்டங்களிலும் 'செற்-அப்' ஆட்டங்களிலும் பங்கு பற்றவிருக்கின்றன.

இன்றையபோட்டியில் சிறுப்பிட்டி தெற்கு உதைய தாரகை வி. க. "A" "B" மயிலிட்டி இளங்கோ வி.க. இமையாணன் கலைமகள் வி.க, கதிரிப்பாய் வறணன் வி.க. 'B' இடைக்காடு வடக்கு பிள்ளையார் வி.க. 'B' ஆகியன 6 பேர் ஓவர் ஆட்டத்திலும் இமையாணன் கிழக்கு கலைமகள் வி.க. 'ஏ' தொண்டமானாறு சிறீமுருகன் வி. க, உடுப்பிட்டி யூனியன் வி க. 'பி' ஆகியன 4 பேர் ஓவர் ஆட்டத்திலும் மோதுகின்றன. (கு-அ)

## 36 ஸ்ரீ 405ம் இலக்க உழவு இயந்திரம் விற்பனை

வலி கிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவிப்பிலுள்ள இங்கிலாந்து மொடல் 36ஸ்ரீ405 என்னும் இலக்கத்தையுடைய டீசல் பெயர்குசன் 135 டீசல் உழவு இயந்திரம் 44ஸ்ரீ5460 என்ற இலக்கத்தையுடைய இங்கிலாந்துப் பெட்டியுடன் டிஸ்லர் கலப்பையுடனும் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவர்கள் மீளப்பெறாத பணமாகரூபா5/-ம் மீளப்பெறத்தக்க பணமாக ரூபா 250/-ம் செலுத்தி 11-4-79ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, 18-4-79ந் திகதிக்கு முன்னதாக தலைவர், வலி கிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் என்ற விலாசத்திற்கு அரக்கு முத்திரை இடப்பட்ட பதிவுத் தபாலில், "உழவு இயந்திரக் கேள்விப் பத்திரம்" என்று இடதுபுற மேல் மூலையில் எழுதி அனுப்புதல்வேண்டும். பார்வையிட விரும்புவர்கள் 9-4-79ந் திகதி தொடக்கம் காரியாலய நேரத்தில் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம். அரக்கு முத்திரையிடப்படாத பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்.

தலைவர்

2072

## 10 வீத சம்பள உயர்வு இன்றேல் உடன் நடவடிக்கை

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனவரி முதல் அமுல்செய்யப்பட்ட 10 வீத சம்பள உயர்வை இதுவரை வழங்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. தொழில் அமைச்சு இதற்கான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. (இ)

# விலைப்பட்டியல் இன்றேல் அபராதமும் சிறையும்

## கருத்தரங்கில் விலைக்கட்டுப்பாட்டதிகாரி

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை தனிப்பட்ட வியாபாரிகள் மட்டுமல்லாமல் சகல கூட்டுறவுச்சங்கங்களும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். எந்தவொரு வியாபாரியும், தமது நிறுவனத்தில் அரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை என்று குறிப்பிடப்பட்ட 85 பொருட்களில் எவற்றையாவது வைத்திருந்தால், அதற்கான விலைப்பட்டியலை பாவனையாளரின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

இதை மீறும் வர்த்தகர்களும் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கூட்டுறவாளர்களும், அபராதமும், சிறைவாசமும் அனுபவிக்க வேண்டும்.

இவ்வாறு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய சாலை மண்டபத்தில் நடைபெற்ற நல்லூர் உதவி அரசாங்க பிரிவு வர்த்தர்கள், கூட்டுறவாளர்களுக்கான, பாவனையாளர் பாதுகாப்புச் சட்ட கருத்தரங்கில் யாழ் மாவட்ட விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். வேல்முருகு குறிப்பிட்டார்) கருத்தரங்கிற்கு, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தலைமை தாங்கினார்.

திரு. எஸ். வேல் முருகு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

எந்தவொரு வியாபாரியோ கூட்டுறவுச்சங்கமோ இச்சட்டத்தை மீறியதாக நிரூபிக்கப்பட்டால், முதல் முறை மூவாயிரம் ரூபாய் அபராதமும் 3 மாத சிறைத்தண்டனையும்: இரண்டாவது முறையான குற்றத்திற்கு 6 மாத சிறைத்தண்டனையும் 7500 ரூபா அபராதமும்; மூன்றுவது முறையான குற்றத்துக்கு, சொத்துக்களைப்பறிமுதல் செய்தல் போன்ற தண்டனையும் விதிக்கப்படும்.

புதிய விதிகளின்படி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பொருட்களுக்கும் விலைப்பட்டியல் இடப்பட வேண்டும். ஆனால் இவ்விலைகள் மாற்றம் அடையும் போது. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மாற்றம் செய்யலாம்.

கூட்டுறவுக்கடைகளிலோ தனியார்கடைகளிலோ விலைப்பட்டியல் இல்லாத விடத்தும் பொதுமக்கள் புகார் செய்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

கருத்தரங்கில் திரு. எஸ். அருளானந்தமும், திரு. சிதம்பரநாதனும் உரையாற்றினர். (செ)

## அருணோதயா இலட்சியப் பெண் போட்டி

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவரிடையே நடாத்தப்படும் 'இலட்சியப் புதுமைப் பெண்ணு'க்கான போட்டியில் வெற்றி பெறுபவருக்கு இன்று நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் பரிசில் வழங்கப்படவுள்ளது.

ஒரு இலட்சியப் பெண்ணுக்குத் தேவையான சமையல், வீட்டலங்காரம், உடை அமைத்தல், உடை அலங்காரம், கூந்தல் அலங்காரம் என்பவற்றில் உயர் வகுப்புப் பெண்களுக்குப் பயிற்சியளித்து போட்டி நடாத்தப்படவுள்ளது. [கு-அ]

## இடமாற்றம் ரத்து

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி இடமாற்றம் செய்யப்பட்ட பெண் உதவி வைத்திய அதிகாரியின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அவரது இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு சுகாதார அமைச்சருக்கும், ஜனாதிபதிக்கும் அப்பகுதி மக்கள கோரியதை அடுத்தே இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. [கு-அ]

## யோகசுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யோகசுவாமிகள் குருபூசை எதிர்வரும் 7-ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறவுளது.

அன்று அதிகாலை சிவதொண்டன் நிலையத்தில் அபிஷேகம் ஆராதனை நடைபெற்றபின் அடியார்கள அன்பர்களின் பாதயாத்திரை ஆரம்பமாகி கொழும்புத்துறை ஆச்சிரமத்தைச் சென்றடையும் அங்கு குருபூசை நடைபெறும். (கு)

## பண்டிதருக்கு மணிவிழா

[கொழும்பு]

தமிழர் விடுதலைக்கூட்டணி அமைப்பு நிர்வாகச் செயலாளரும் ஊர்காவற்றுறை எம்.பியுமான பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு மணிவிழா நடத்துவது என திருச்செல்வம் பொதுப்பணி மன்றம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு கதிரேசன் வீதியிலுள்ள பணிமனையில் மன்றத் தலைவர் திரு. இ. வே. நடராஜா தலைமையில் நடைபெற்ற ஆலோசனைப் பொதுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (கு-அ)

## புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் தேர்தல் தொகுதி பஸ்பிரயாணிகள் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் :

காப்பாளர்; கே. சபாபதிப்பிள்ளை (உதவி அரசாங்க அதிபர்), தலைவர்: ஆர். சந்தையா, உபதலைவர்: கே. கேசவன், காரியதரிசி: என். ஜெயபாலன், உப-காரியதரிசி: ஏ. விவேகானந்த சோதி, பொருளாளர்: ஆர். குணேந்திரன், கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி நல்லூர், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளிலிருந்து 22 பேர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். [கொ-நி]

### "ஆகஸ்ட்கலவரத்தில் இழைத்த அநியாயங்களின்பின்

# பொலிஸார் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை எப்படி ஏற்படமுடியும்?

## பத்திரிகையாளரிடம் முகாந்திரம் இராசையா கேள்வி

மாளிகைபோன்றபெரிய வீடு, மாலை வேளையின் மஞ்சள் வெய்யில் மதிலிலும் சுவரிலும் பட்டுத் தெறித்து தனியழகைக் கொடுத்தது. அதுதான் சில்லாலையிலுள்ள டாக்டர் எஸ். பி. ஈ. இன்னாசித்தம்பி இல்லம் எங்கள் வரவை எதிர்பார்த்து சித்த ஆயுர்வேத டாக்டர்கள் அங்கு காத்திருந்தனர்.

சரியாகப் பிற்பகல் நான்கு மணிக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தோம். வட இலங்கை சித்த ஆயுர்வேத மருத்துவர்கள் சம்மேளனத் தலைவர் வைத்திய சிரோமணி எஸ். பி. ஈ. இன்னாசித்தம்பி, செயலாளர் வைத்திய சிரோமணி எம். எஸ். சுந்தரம் அமைப்பாளர் வைத்திய பிரதீபம் ஈ. பி. இராசையா, லங்கா ஆயுர்வேத கல்லூரி அதிபர் டாக்டர் ஆர். ஈ. டபிள்யூ. ஜெகோரத்தினம் டாக்டர் கே. கனகலிங்கம் மற்றும் சம்மேளன உறுப்பினர்கள் எங்களை அன்புடன் வரவேற்றனர்.

இன்னாசித்தம்பி வளவு கலகலப்பாக இருந்தது. மன்னார் வவனியா, கிளிநொச்சி முதலான பகுதிகளிலிருந்தும் டாக்டர்கள் இவ்வைபவத்திற்கு வந்திருந்தனர். டாக்டர் இன்னாசித்தம்பி பத்திரிகையாளர்களை டாக்டர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்

தகவல் இலாகா உதவி அதிகாரி திரு ரி விக்கிரமசிங்கா கலந்துரையாடுவதுடன் கேள்விகள் கேட்குமாறும், பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இங்குள்ளகுறைகள், தேவைகள், பிரச்னைகள் பற்றிகேட்டு அறிந்து உதவி செய்யவே தாம் இங்கே வந்துள்ளதாகவும், எதையும் மனம்விட்டுத் தெளிவாகவும், விபரமாகவும் பத்திரிகையாளர்களுக்குக் கூறும்படி திரு விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்தார்

முகாந்திரம் ஈ. பி. இராசையாவினது பேச்சு, சித்த வைத்தியர்கள் - தமிழ் மக்கள் ஆகியோரது இன்றைய பிரச்னைகளைத் தெளிவுபடுத்தியதோடு பத்திரிகையாளர்களையும் பெரிதும் கவர்ந்தது.

### சித்தவைத்தியத்திற்கு உதவுவதில் அரசு பின்னிற்கிறது

ஆயுர்வேத அமைச்சும் திணைக்களமும் சித்த வைத்தியர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது என்றும் சிங்கள மொழி

**பத்திரிகையாளர் சுற்றுலா— 10**

யைத் திணிப்பதுடன், சித்த வைத்தியத்திற்கு உதவுவதில் அரசு பின்னிற்பதாகவும் முகாந்திரம் இராசையா குறிப்பிட்டார்.

### தரப்படுத்தலுக்கும் கண்டனம்

இன்று தமிழ் மாணவர்களுக்கு எதிராக அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொண்டுள்ள தரப்படுத்தலை அவர் வன்மையாகக் கண்டித்தார். பொருளாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள் போதியளவு இல்லாத நிலையிலும் கஷ்டப்பட்டுப் படிக்கும் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லமுடியாமல் தடுக்கும் இத்தரப்படுத்தல் முற்றாக நீக்கப்படவேண்டுமென்றும் முகாந்திரம் இராசையா முழங்கினார்.

### பொலிஸார் அநீதி

முகாந்திரம் இராசையா மேலும் கூறியதாவது:

''வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அநீதியான செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

### நான் ஒரு பொலிஸ் குடும்பம்

வடபகுதியில் முதன்முதலில் ஸ்பெஷல் பொலிஸ் பிரிவை ஆரம்பித்தவன் நான். பொலிஸாருடன் எனக்கு நல்ல ஈடுபாடு உண்டு பொலிஸ் அதிபர் இராமநாதன் என் மருமகன் மற்றொரு மருமகன் கொழும்பில் சி ஐ டி பொலிஸாக இருக்கிறார். மற்றொரு மருமகன் தலைகமைவில் பொலிஸாகக் கடமையாற்றுகிறார்.

1977ம் ஆண்டு ஆகஸ்ட் கலவரத்தில் பொலிஸார் நடத்திய அட்டூழியத்தின் பின் எனக்குப் பொலிஸாரில் வெறுப்பு ஏற்பட்டுள்ளது. வவனியாவில் பொலிஸ் இன்ஸ்பெக்டரே பதவியாவிலிருந்து கொள்ளையர்களை வரவழைத்துத் தமிழர் கடைகளைத் தாக்கியிருக்கிறார். சன்சோனிக் கமிஷன் விசாரணையின்போது பொலிஸாரின் அட்டூழியங்கள் பற்றி விரிவாகத் தெரிவிக்கப்பட்டது.''

நிருபர் ஒருவர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதில் அளித்த திரு. இராசையா, தாம் 60ம் ஆண்டு முதல் 71ம் ஆண்டு வரை ஸ்பெஷல் பொலிஸ் அதிபராகக் கடமையாற்றியதாகக் கூறினார்.

நிருபர். உங்களுக்குக் கீழ் எத்தனை பொலிஸார் கடமையாற்றினர்?

**— கா. யோகநாதன் —**

பதில்: 90 பேர்.

நிருபர்: எவ்வளவு சம்பளம்?

பதில்: இதற்குச் சம்பளம் இல்லை. கௌரவப் பதவி. கடமையாற்றும் நாட்களில் மட்டும் 25 ரூபா கிடைக்கும்

நிருபர்: எங்கே கடமையாற்றுவீர்கள்?

பதில்: தேர்தல் காலங்களில். அரசியல் கூட்டங்கள் நடக்கும்போது. நல்லூர் திருவிழாக் காலங்களில்.

### பொலிஸார் மீது தமிழ்மக்களுக்கு நம்பிக்கை ஏற்படாது

திரு. இராசையா தொடர்கிறார்: பொலிஸார் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பெரியார்களின் சிலைகளை உடைத்தார்கள். கடைகளைக் கொளுத்தினார்கள். கொள்ளை அடித்தார்கள். தவறணைகளை உடைத்தார்கள் பொதுமக்களைத் தாக்கினார்கள். அப்பாவி மக்களை ஈவிரக்கமின்றிப் பட்டப்பகலில் சுட்டுத் தள்ளினார்கள். இதற்குப் பிறகுமா தமிழ்மக்களுக்குப் பொலிஸில் நம்பிக்கை ஏற்படும்.

ஒரு காலத்தில் ஸ்பெஷல் பொலிஸ் அதிபராக இருந்த என்னாலேயே பொலிஸாரின் அட்டூழியத்தைத் தாங்கமுடியாமலிருக்கும்போது சாதாரண மக்கள் எப்படித் தாங்கிக்கொள்வார்கள்?

### சம உரிமை அல்லது தமிழ் ஈழம்

நிருபர்: தமிழ்மக்கள் ஒற்றுமையாக வாழ விரும்புகிறார்களா?

பதில்: தமிழ்மக்கள் ஒற்றுமையை வெறுப்பவர்கள் அல்லர். சமாதானத்தை வெறுப்பவர்கள் அல்லர். தமிழ்மக்களின் மொழி, சமய கலாச்சார உரிமைகள் வழங்கப்பட்டுத் தமிழரின் இறைமைகள் பேணப்பட்டால்— இந்நாட்டில் சம உரிமையுடன் வாழமுடியுமானால்— ஜனாதிபதி கூறுவதுபோல் தார்மீக ஆட்சி நிலவுமேயானால்— சிங்கள மக்களுடன் தமிழர் இணைந்து வாழமுடியும். இது சரிவராவிடில் பிரிந்து தமிழ் ஈழத்தில் வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை.

'சன்' பத்திரிகை நிருபர் திரு விஜயதுங்கா இவரின் கருத்தைப் பாராட்டி, இக்கருத்துக்களை, சிங்கள மக்கள் முன் வைப்பதாகத் தெரிவித்தார்.

### 77 ஆகஸ்டுக்குமுன் யாழ்ப்பாணம்

முகாந்திரம் இராசையா மேலும் கூறியதாவது:

''1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் முன்பு யாழ்ப்பாணம் ஒரு அமைதியான சமாதானத்திற்குரிய பிரதேசமாக விளங்கியது ஆகஸ்ட்கலவரத்தின் பின்தான் யாழ்ப்பாணத்தின் நிலைமைமாறியது

பொலிஸாருக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்குவது, பிரச்னைக்குத் தீர்வு ஆகாது. இரு சமுகத்தினரிடையேயும்- தீவிரவாத சக்திகள் உண்டு. நல்லெண்ணம் உள்ள மக்களிடம், அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ போன்றவர்கள் பக்கம திருப்பி பத்திரிகையாளரின் பூரண ஒத்துழைப்புடன் பிரச்னைகளைத் தீர்த்து இலங்கையைக் காப்பாற்றுவோம்''

லங்கா ஆயுர்வேதக்கல்லூரி அதிபர் டாக்டர் ஆர் ஈ. டபிள்யூ. ஜெயகோரத்தினம், கல்லூரி வளர்ச்சிபற்றி விபரமாக எடுத்துக் கூறினார். அவரைத்தொடர்ந்து டாக்டர் கே. கனகலிங்கமும், உரை நிகழ்த்தினார்.

கடந்துரையாடலையும் ஒலிபரப்புக் கூட்டுத்தபானப் பிரதிநிதிகள் ஒலிப்பதிவு செய்து கொண்டனர்.

பத்திரிகையாளர்களுக்கு சம்மேளத்தின் 12 வது வருட மலர் வழங்கப்பட்டது.

(வளரும்).

---

### மக்கள் கருத்து

#### விசேஷ படி மறுப்பு

சகல ஊழியருக்கும் வழங்கப்படும் என உறுதி கூறப்பட்ட விசேட படியான 10 வீத அடிப்படைச்சம்பளம் அல்லது 50 ரூபா உதவி வைத்திய அதிகாரிகளின் உள்ளகப்பயிற்சியின் போது (இன்ரேணஷிப்) வழங்கப்பட்டு வந்து பின் பங்குனி மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட விசேட படி சம்பளத்திலிருந்தும் கழிக்கப்படுகிறது. தனியார் துறையினரும் சமயா சமய ஊழியரும் கூட இவ்விசேட படியைப் பெறக்கூடியதாயிருந்தும் அரச ஊழியர்களான உதவி வைத்திய அதிகாரிகளுக்கு இதுமறுக்கப்படுவது அநீதியானது சம்பந்தப்பட்டோர் கவனமெடுப்பார்களா?

அ. ரஞ்சன்
மகாவைத்தியசாலை
கண்டி.

#### தபால்பெட்டி பொருத்துவார்களா?

யாழ். கஸ்தூரியார் வீதி கல்லூரிவீதிச்சந்தியில் இதுவரை காலமும் இருந்து வந்த தபால் பெட்டி ஒருசில விஷமிகளின் செயலால தபால பகுதியினரால் கழற்றிச்செல்லப்பட்டுள்ளது. இப்பொழுது இப்பகுதிமக்கள் தபால் போடுவதற்கு நீராவியடி உபதபால் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தயவுசெய்து மேற்படி தபால் பெட்டியை மீண்டும் பொருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

அ.லிங்கநாயகம்
கஸ்தூரியார்வீதி
யாழ்ப்பாணம்.

#### சேவைமனப்பான்மை எல்லாருக்கும் வருமா?

எனது இரட்டைக் குழந்தைகளுக்குப் பிறப்புப்பதிவு செய்வதற்காக யாழ் நகர் மேற்கு வைத்திய பதிவாளரிடம் சென்றேன் எந்த வித சுணக்கமுமின்றி என்னை உட்கார வைத்து விட்டு எல்லாப் பதிவுகளையும் செய்து விட்டு பதிவுப் பத்திரத்தை (இரண்டு பிள்ளைகளுக்கும்) சொற்ப நேரத்தில் தந்தார் இவ்வித சேவை மனப்பான்மை எல்லாருக்கும் ஏற்படவேண்டும்

எஸ். கே.சின்னத்தம்பி

---

# "சமூக பொருளாதார ஆய்வுமூலம் திட்டம் அமுலாக்கப்பட வேண்டும்"

### சாவகச்சேரிக்கருத்தரங்கில் 'நவம்' வலியு த்து

(மட்டுவில்)

''திட்டமிட்ட பொருளாதார விருத்திமூலமே சாவகச்சேரித் தொகுதி மக்கள்நன்மையடையலாம்'' என்று சாவகச்சேரித் தொகுதி தொடர்பான சமூகபொருளாதார ஆய்வின் இரண்டாவது கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி அபிவிருத்தி அலுவலகத்தில் இடம்பெற்றபோது, கருத்தரங்கிற்குத் தலைமைதாங்கித் பேசுகையில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என் நவரத்தினம் கூறினார்.

இக்கருத்தரங்கினை மேற்கு ஜெர்மனியின் கொன்ருட் அடனோர் நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் ஆணையாளர் கலாநிதி ஸ்ரோல், திட்ட அமுலாக்க அமைச்சின் பிரதிஆணையாளர் திரு. குணரத்தினம் ஆகியோர் குத்துவிளக்கேற்றித் தொடக்கிவைத்தனர். பதில் அரசாங்க அதிபர் திரு. ஜெகநாதன், பேராசிரியர் சோ. செல்வநாயகம், மாவட்ட திட்டமிடல் பகுதி பிரதிப் பணிப்பாளர் திரு. லோகேஸ்வரன், திரு. புவனேந்திரன், கொன்ருட் அடனோர் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி ஒருத், உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் முருகவேல் ஆகியோர் உட்படப் பலர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப்புவியியல்துறைவிரிவுரையாளர்கள் மற்றும் அரசாங்க அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இக்கருத்தரங்கில் பங்குபற்றினர். திரு. நவரத்தினப் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது!

''பல் முகப்படுத்தப்பட்ட முதல் ஒதுக்கீட்டின் கீழ் சாவகச்சேரித்தொகுதி விருத்தி செய்யப்பட்டு வருகின்ற பொழுதும், போதியளவு அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறதென்று கூறமுடியாது விரிவான சமூக பொருளாதார ஆய்வின் அடிப்படையில் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதே பொருத்தம். நீண்டகால அபிவிருத்தி ஏற்படுவதற்குரிய சமூக பொருளாதார ஆய்வை பேராசிரியர் செல்வநாயகம் மேற்கொண்டு வருகிறார் அவரது அறிக்கையிலுள்ள சிபாரிசுகளைத் தழுவி அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இதற்கு அரசாங்கஉதவியும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியும் நிச்சயமாகக் கிடைக்கும் இந்த முறையில் நடவடிக்கை, சாவகச்சேரித் தொகுதியிலேயே முதன்முதலாக மேற்கொள்ளப்படுகின்றது'' என்று கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் சோ. செல்வநாயகம் சாவகச்சேரித் தொகுதி தொடர்பான ஆய்வின் முதற்கட்ட அறிக்கையைச் சமர்ப்பித்து அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிப் பேசினார். பேராசிரியர் செல்வநாயகம் தமது உரையில்;

''நீண்டகாலத் திட்டமிடல் மூலமே ஒழுங்கான வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இதற்கு அடிப்படையாகவே விரிவான சமூகபொருளாதார ஆய்வு இத்தொகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரையும் கிடைத்த புள்ளிவிபரங்களைத் துணையாகக் கொண்டு இந்த முதனிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது தொகுதியிலுள்ள அபிவிருத்தி தொடர்பான சில பிரச்னைகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், இன்றைய நிலையில் சிலகுறிப்பிட்ட சமூகவசதிகளையும் தொழில் வசதிகளையும் விருத்திசெய்வது அவசியமாகவுள்ளது. இத்தொகுதியில் பட்டினங்களுக்குத் தேவையான குடிநீர்வசதி, கிராம மின்சார வசதி, தெருக்கள் விலங்கு வளர்த்தல், தொழில் நுட்பப் பயிற்சி உடை தயாரித்தல் முதலான அம்சங்கள் உடனடியாகப் பெருக்கப்படுதல் அவசியமாகும் தொழில்வாய்ப்பில்லாதிருக்கும் இளைஞர்களுக்கு இவற்றின் மூலம் தொழில் வாய்ப்பும் தொழில் நுட்பப் பயிற்சியும் ஏற்படும் சமூக பொருளாதார ஆய்வின்இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டதும் அதன் அடிப்படையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்

[5ம் பக்கம் பார்க்க]

### சேது சமுத்திரத்திட்டம்

# தமிழக அரசின் அறிக்கையை இந்திய அரசு எதிர்பார்க்கிறது

## பரிசீலனையின்பின் வேலைகள் ஆரம்பமாகும்

சென்னை, ஏப். 4

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள சேது சமுத்திரத்தை ஆழமாக்கி அபிவிருத்தி செய்யும் திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இத்தகவலை இந்திய மத்திய கப்பல்துறை ஸ்டேட் அமைச்சர் திரு சந்திரா தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சேதுசமுத்திர அபிவிருத்தித் திட்டம் குறித்து தமிழக அரசிடமிருந்து அறிக்கை ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் அந்த அறிக்கை கிடைக்கப்பெற்று அதனைப் பரிசீலித்த பின்னர் சேதுசமுத்திரத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் திரு. சந்திரா தெரிவித்தார்.

சேது சமுத்திர அபிவிருத்தித் திட்டம் பூர்த்தியடைந்ததும் கிழக்கிலிருந்து மேற்குக்கும் மேற்கிலிருந்து கிழக்குக்கும் செல்லும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றி செல்லாமல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள கடல் மூலம் பிரயாணம் செய்யலாம் என்றும் இதன்மூலம் பெருந்தொகைப் பணமும் நேரமும் மீதப்படுத்தப்படும் என்றும் திரு சந்திரா தெரிவித்தார்.

### 100 கோடி ரூபா தேவை

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 100 கோடி ரூபா செலவாகும் என வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் கூறினார். (இ)

---

### இடிஅமின் உத்தரவு

# பின்வாங்குவோர் சுடப்படுவர்!

கம்பாலா, ஏப். 4

புரட்சிப்படைகளுக்கு எதிரான போரில் பின்வாங்கும் உகண்டாப் படை வீரர்கள் அந்தந்த இடங்களில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்படுவர் என்று உகண்டா ஜனாதிபதி ஜனரல் இடி அமின் தமது படையினரை எச்சரித்துள்ளார். கடும்போர் நடைபெற்று வரும் உகண்டாவின் கிழக்குப் பகுதி நகருக்கு விஜயம் செய்தபோதே ஜெனரல் இடி அமின் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்ததாக கம்பாலா வானொலி அறிவித்தது.

இதேவேளை தன்சானியப் படைகளின் ஆதரவுடன் சமர் செய்துவரும் புரட்சிப்படைகள் கம்பாலாமீது பெரும் தாக்குதலை நடத்திவருகின்றது என அறிவிக்கப்பட்டது.

நிலைமைமோசமாகும்எனஎதிர்பார்த்து சுமார் ஆயிரம் வெளிநாட்டுக் குடும்பங்கள் நேற்று கம்பாலாவிலிருந்து கென்யா சென்றதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

---

# "சரண்சிங் ராஜினுமா செய்யவேண்டும்"

## இந்திரா காங்கிரஸ் கோரிக்கை

புதுடில்லி, ஏப். 4

இந்திய துணைப் பிரதமர்களில் ஒருவரும் நிதி அமைச்சருமான திரு சரண்சிங்கின் உறவினர் தொடர்பான பிரச்னைகளை விசாரிக்க கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டும் என்று இந்திராகாங்கிரஸ் கட்சி பிரதமர் திரு. தேசாயிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி விசாரணை பாரபட்சமின்றி இருக்க திரு சரண்சிங் தமது பதவியை ராஜினுமாச் செய்யவேண்டும் என்றும் இக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

### சைனுய் பிரதேசத்தில்

# ஒரு பகுதி எகிப்திடம் திருப்பி ஒப்படைக்கப்படும்

## சர்வதேச எல்லை மே 27 திறக்கப்படும்

கெய்ரோ, ஏப். 4

1967-ம் ஆண்டு எகிப்து-இஸ்ரேல் யுத்தத்தில் இஸ்ரேல் கைப்பற்றிய சைனுய் பிரதேச சர்வதேச எல்லைப் பிரதேசத்தை மே மாதம் 27-ந் திகதி முதல் திறந்து வைப்பதென்றும் சைனுய் பிரதேசத்தின் முக்கிய நகரான அல்-அரிஸ் பகுதியை எகிப்திடம் திருப்பி ஒப்படைப்பதென்றும் இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் திரு பெகின் நேற்று கெய்ரோவில் எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தையின்போதே மேற்கண்டவாறு இணக்கம் காணப்பட்டது

திரு. பெகினின் வரலாற்று முக்கியம் வாய்ந்த இந்த விஜயத்தின்போது இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டது

சைனுய பிரதேசத்தின் ஒரு பகுதியை திருப்பி ஒப்படைத்தாலும் இஸ்ரேலியப் படைகள் அப்பிரதேசத்திலிருந்து முற்முக வாபஸ் பெறமாட்டாது என்றும் திரு. பெகின் தெரிவித்தார் (இ)

---

### மனைவி மகளுடன் இறுதிச்சந்திப்பு:

# பூட்டோ $2\frac{1}{2}$ மணி நேரம் உரையாடினுர்

இஸ்லாமாபாத், ஏப். 4

மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ள முன்னுள் பாகிஸ்தான் பிரதமர் ஜனுப் சுல்பிகார் அலி பூட்டோலை சிறையில் வைத்து அவரது மனைவியும் மகளும் நேற்று சந்தித்து உரையாடினர்.

சுமார் இரண்டரை மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பே இவர்களது இறுதிச் சந்திப்பாக இருக்கும் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதே வேளையில், ஜனுப் பூட்டோவுக்குச் சொந்தமான மூன்று வீடுகளைச் சோதனையிட்ட அரசாங்க அதிகாரிகள் அவ்வீடுகளிலிருந்து பல முக்கியமான இரகசிய தகவல்களடங்கிய தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றியுள்ளனர். (இ)

---

## பிரஷ்னேவின் உடல்நிலை கவலைக்கிடம்

மாஸ்கோ, ஏப் 4

சோவியத் ஜனுதிபதி திரு. பிரஷ்னேவின் உடல்நிலை மிக மோசமாகி உள்ளதாக மாஸ்கோ செய்திகள் தெரிவிக்கின்றன.

நீண்ட நாட்களாக இருதய நோயினுல் பாதிக்கப்பட்டிருக்கும் திரு. பிரஷ்னேவை அமெரிக்கா, சுவிட்சர்லாந்து உட்பட 5 மேற்கு நாடுகளின் டாக்டர்கள் தீவிர பரிசீலனை செய்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

நீண்டநாட்களுக்கு அவர் தொடர்ந்தும் உயிர்வாழ்வாரென்பது சந்தேகத்திற்கிடமாகவே உள்ளது என்று டாக்டர்கள் தெரிவித்தனர். (க)

---

சென்னை, ஏப். 4

கோயம்புத்தூரில் பஸ் பிரயாணி ஒருவரிடமிருந்து 4லட்சம் ரூபா பெறுமதியான தங்கப் பாளங்களை சுங்கப்பகுதி அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (இ)

---

### முதலாளித்துவ சக்திகளுடன்

# இணைந்து ஐ.தே.க இனபேதத்தை வளர்க்கிறது

## தொழிற்சங்கத் தலைவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"சகல கட்சியினரையும் கொண்ட வட்ட மேசைமகாநாட்டைக் கட்டி அதன் மூலம் சிறுபான்மை இனத்தின் பிரச்னைகளைத் தீர்ப்போம் என்றுகூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் பின் அதை மறந்து முதலாளித்துவ சக்திகளோடு கூடி இன பேதத்தை வளர்த்து வருகின்றனர்."

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட அரசாங்க பொதுச் சேவைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் 9-வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தபால் தந்தி ஊழியர் சம்மேளனத் தலைவர் திரு. ஜே. ஏ கே. பெரேரா பேசுகையில் கூறினார்.

சம்மேளன யாழ். மாவட்டத் தலைவர் திரு. எஸ். இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பெரேரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழ் மக்களின் பிரச்னையைத் தீர்ப்போம், விலைவாசிகளைக் குறைப்போம், பொது மக்களின் இன்னலைப் போக்குவோம் என்று தேர்தலுக்கு முன், கூறியவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின், அதையெல்லாம் மறந்தனர். இதனுல் விஷம்போல் விலைவாசி உயர்ந்தது, எமது நாணயத்தின் பெறுமதி குறைந்தது தொழிலாளர் பாதிக்கப்பட்டனர். தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்பட்டன. சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாகத் தமிழ் அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு மறுக்கப்பட்டது. பதவி உயர்வுகள் தடைப்பட்டன பல வருடங்கள் அரச ஊழியர்களா இருந்து ஒய்வூதியம் பெறும் காலம் வரும் நேரத்தில் ஒய்வூதியம் இல்லாது வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

### போராட்டம் நடாத்தத் திட்டம்

"இவர்களின் நல்வாழ்வுக்காக எமது தொழிற் சங்க சம்மேளனம் பெரும் போராட்டம் நடத்த உள்ளது. கடந்த காலங்களில் நாம் நடத்திய பெரும் போராட்டத்தினுல், தபால் இலாகாவில் உள்ள தொண்ணூறுவீத சிற்றூழியர்களுக்குச சிங்களத் தகைமையில் இருந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது இதுபோன்று இன்னும் பல இலாகாக்களில் வேலைசெய்யும் பல சிற்றூழியர்களுக்கும் சிங்களத்தகைமையிலிருந்து விதிவிலக்கப்பட்டுள்ளது.

### சர்வ இயக்கப் போராட்டம்

"கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களைக் கொண்டுள்ள பெரும் தொழிற் சங்க சம்மேளனமாகத் திகழுவது எமது சம்மேளனமே எமமால் நடத்தப்படும் அடுத்த போராட்டம் தொழிலாளர்களை மட்டும் கொண்டதாக இல்லாது பொதுமக்களையும் அடங்கிய ஒரு சர்வ இயக்கப் போராட்டமாக அமைய இருக்கிறது. அப்பொழுது தென் இலங்கை மக்களோடு வட இலங்கை மக்களும் சேர்ந்து போராடவேண்டும்.

### சிறுபான்மையினரை அடக்க புலிச்சட்டம்

தொழிலாள வர்க்கத்தை மதித்த கூட்டுமுன்னணி அரசு போன்று அல்லாது தொழிலாள வர்க்கத்தை அடக்கி அவர்களின் போராட்டங்களை ஒடுக்குவதற்காக அரசுசர்வாதிகாரச் சட்டங்களைக் கொண்டு வரவுள்ளது. புலிகளை அடக்குவதற்கெனக்கூறிக்கொண்டு சிறுபான்மை மக்களை அடக்குவதற்கெனக் கூறிக்கொண்டு சிறுபான்மை மக்களை அடக்குவதற்காக ஒரு சட்டமும் இயற்ற அரசு தீர்மானித்துள்ளது. இவற்றையெல்லாம் நாம் எதிர்த்துப் போராடும் வேளை, யாழ்ப்பாணத்திலுள்ள பத்துச் சங்கங்களைக்கொண்ட எமது சம்மேளனம் தனது அங்கத்தவர்களுடன் பொதுமக்களையும் சேர்த்துப் போராட முன்வரவேண்டும்.' (அ)

---

# மே முதல் விமானக்கட்டணம் அதிகரிக்கிறது

ஜெனிவா, ஏப் 4

விமானக் கட்டணங்களை மே மாதம் 1-ந் திகதியிலிருந்து 7 சத வீதத்தால் அதிகரிப்பதென்றும் ஜெனிவாவில் கூடிய சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கம் தீர்மானித்துள்ளது.

---

# "மயிலிட்டி காசநோய்ஆஸ்பத்திரிக்கு மேலும் 2 டாக்டர்களை நியமித்து உதவுக"

[யாழ்ப்பாணம்]

"மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையில் சுமார் 150 நோயாளர் சிகிச்சை பெறுகின்றபோதும் ஒரே ஒருபெண் டாக்டரே சகல நோயாளர்களையும் கவனித்து வருகிறுர் அது மட்டுமல்லாமல் வெளி நோயாளர்களையும் அவரேகவனிக்கவேண்டியுள்ளது. அவர் தம்மால் முடிந்தவரை சேவை செய்தாலும் நோயாளர் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர் நோயாளருக்குத்திருப்திகரமான சேவையளிக்கத்தக்க வகையில் இரண்டு உதவியாளர்களை உடனே நியமிக்கவும்"

இவ்வாறு சுகாதார நிலைய நோயாளர் நலன்புரிச்சங்கம் சுகாதார அத்தியட்சகருக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கோரியுள்ளது அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"எங்கள் கோரிக்கையின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வைத்தியசாலைக்கு நேரில்வந்துஎமது கஷ்டங்களைக் கண்டறிந்து தங்களிடம் முறையிட்டதன்பேரில் இருதய பரிசோதனை நிபுணர் மாதம் இருநாட்கள் இங்கு கடமையாற்ற நியமிக்கப்பட்டார். இவ்வாறு வருவதால் நோயாளருக்கு எவ்வித பயனுமில்லை. எனவே அவரை ஒவ்வொரு வாரமும் அனுப்ப ஏற்பாடு செய்யவும்.

நோயாளருக்குப்போஷாக்கு உணவும் மிகவும் அவசியமானது. வெறும்பாணும், தேநீரும், சோறும்தான் இங்குவழங்கப்படுகிறது. வார்ட்டுக்களில் படுக்கைகளிலும் மூட்டைப் பூச்சியும் அதிகரித்துள்ளது எனவே இது பற்றியும் உடனடியாகக் கவனம் செலுத்தவும்." [கு-அ]

வெஸ்லி
(காங்கேசன்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-சுஜாதா
பேரும் புகழும்

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Fury At Smuggler's Bay

REGAL (Jaffna) Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
THREE YELLOW CATS
(Cinemascope - Color)
Karate Action Thriller

சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15 & 9-45
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கற்புக்கரசி
புத்தம்புதிய பிரதி

ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15&9-45
ஜெய்சங்கர் - விஜயநிர்மலா
உயிரா மானமா
(புத்தம்புதிய பிரதி)

இரு தினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.-பத்மினி
காட்டுரோஜா (புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி: 3-30, 6-30&9-45
சனி, ஞாயிறு: 10-30, 2-30, 6-30 & 9-45
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
சாரதா
(புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்) போன்: 7688 தினசரி 4 காட்சிகள்
பால்நாகம்மா

தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ். நகர்)
சிவாஜி - பத்மினி
டி. ஆர். மகாலிங்கம்
ஸ்ரீ வள்ளி
(புதிய பிரதி—கலர்)
குறிப்பு: யாழ். நகரில் இதுவே கடைசித் தடவையாக திரையிடப்படுவதால் ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள்.

அதிதான ஜனத்திரள் நிறைந்த கடைசி வாரம்!
காட்சிக்குக் காட்சி ஜனக்கூட்டம் - பார்த்தோர் மீண்டும் மீண்டும் பார்க்கும் மன நாடகம்
சாந்தி யாழ்நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
விநோத் கன்னு (வடநாட்டு ரஜனிகாந்த்)
கபீர் பேடி...மௌசமி சட்டர்ஜி...பகவான்...
பின்னணி: லதா மங்கேஷ்கர்
"கச்சே டாக்" - ஹிந்தி கலர்
Also: GORA AUR GALA Hindi Color (TRAILER)

14 வது வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 439
தினசரி 4 காட்சிகள்
10-30, 1-30, 4-30, & 7-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)


# இன்றைய பலன்

**பங்குனிமாதம் 22-ம் திகதி வியாழக்கிழமை**

(5-4-1979)

**மேடம்:** உத்தியோக உயர்விற்கு இடமுண்டு. சிலருக்குப் புதிதாக தொழில் வாய்ப்புக்கு இடமுண்டு. நீண்ட நாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும்.

**இடபம்:** கைநிறையப் பணம் தாராளமாகக் கிடைக்கும். புதிய விருந்தினர்கள் உங்களைத் தேடிவருவார்கள். தொழில்துறையில் இடமாற்றத் திற்கும் இடமுண்டு. வெளியூர்ப் பயணமும் ஏற்படலாம்.

**மிதுனம்:** நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு. உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

**கடகம்:** மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவரின் மீது ஆத்திரம் பிறக்கலாம். இதன்மூலம் கைகலப்பும் ஏற்படலாம். பிள்ளையொன்றின் உடல் நலன் பாதிக்கப்படலாம்.

**சிங்கம்:** வார்த்தைஜாலம் செய்வதன் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். எழுத்தாளருக்கு சிறப்பான தினம், இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும். சிலருக்கு பொதுசன தலைமையும் கிடைக்கலாம்.

**கன்னி:** பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும், தொழில்துறையிலும் பின்தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு. மனத்திடம் விரும்பத்தக்கது.

**துலாம்:** நல்லதைச் செய்வீர்கள். நலன் பெருகும். பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். அரசியல் வாதிகள் அதிர்ஷ்ட தேவதையை அணைத்துக் கொள்வர்.

**விருச்சிகம்:** அறிவுத்தாகம் மேலோங்கும். ஆராய்ச்சியில் ஈடுபட விரும்புவீர்கள். விருந்தினர்களின் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதிர்பாராத பணம் கைக்குக் கிடைக்கலாம்.

**தனுசு:** ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். பூமிப்பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும். தொழில் புரியும் இடத்தில் பிணக்குகள் தோன்றும். சிறு பிணிக்கும் இடமுண்டு.

**மகரம்:** தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நிகழும். களவு திரவழியில் பொருள் வரவிற்கும் இடமுண்டு. கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்:** வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் நிகழும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வாட்டக்கூடும். சகோதரவழியாலும் சஞ்சலம் உண்டு.

**மீனம்:** தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும். பெற்றோர்களாயின் ஆதரவும் கிடைக்கும். தொழிலிலும் வெற்றி உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சாவித்திரி
பாக்கியலக்ஷ்மி


## தவக்கால நற்சிந்தனை

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் ஆறுதலடைவார்கள்.

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் பூமியைச் சுவீகரித்துக்கொள்வார்கள்.

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்.

நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

[மத்தேயு 5. 3 : 11]

—ஞானஒளி

தொகுப்பு : வில்பிறெட்

## சமூக...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]
ளப்படும்'' என்று கூறினார்.

கொன்ருட் அடனோர் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி ஸ்ரோல் பேசுகையில்: கொன்ருட் அடானூர் நிறுவனம் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா முதலான பகுதிகளில் அபிவிருத்திக்காக உதவி வருகின்றது. இலங்கையில் சமூக அபிவிருத்திமுயற்சிகளுக்கு உதவிவழங்கியுள்ளது. சாவகச்சேரிப் பகுதியின் அபிவிருத்தி தொடர்பாகவும் தாங்கள் சிந்திப்பதற்கு இக்கருத்தரங்கு சந்தர்ப்பம் அளித்துள்ளது'' என்றுகுறிப்பிட்டார்.

கொன்ருட் அடனோர் நிறுவனத்தின் புதிய பணிப்பாளராக வந்திருக்கும் கலாநிதி ரெருத் உரை நிகழ்த்துகையில் கடந்த காலத்தில் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கொன்ருட் அடனோர் நிறுவனம் மேற்கொண்ட முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்டு சமூக பொருளாதார அபிவிருத்திக்கு தமது நிறுவனம் உலகின் பல பகுதிகளில் உதவி வழங்கிவருகின்றது. என்று கூறினார்.

இலங்கைத்திட்ட அமுலாக்க அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் திரு. செ. குணரத்தினம் பேசுகையில் இந்தியாவின் பல பகுதிகளில் கிராமிய நிலையில் சமூக பொருளாதார வளர்ச்சி பரவலாக ஏற்பட்டு வருகின்றது. என்றும் அண்மையில் தாம் இந்தியாவுக்கு மேற்கொண்ட பிரயாணத்தின் போது பல நடவடிக்கைகளை அவதானிக்க முடிந்தது என்றும் கூறினார்.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், அரசாங்க அலுவலகங்களைச் சேர்ந்த பொறுப்பு உத்தியோகத்தர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர். சாவகச்சேரித் தொகுதியின் அபிவிருத்தி தொடர்பான பல பிரச்சினைகள் பற்றி இங்கே ஆராயப்பட்டது.

## குளிர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

சாவற்காடு, அந்திக்குளி ஞான வைரவ கோவில் குளிர்த்திவிழா இம்மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை நடைபெறுகிறது.

# வட இலங்கை சங்கீத சபை

## பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ள. 1978 ம் ஆண்டில் நடைபெற்ற இப் பரீட்சை முடிவுகள் தொடர்ந்து "ஈழநாடு" பத்திரிகையில் வெளியிடப்படும்:-

o இவ்வடையாளம் சாஸ்திரப் பரீட்சையில் விசேட சித்தி.

f இவ்வடையாளம் செயன் முறைப் பரீட்சையில் விசேட சித்தி.

[நேற்றைய தொடர்ச்சி]

### இரண்டாம் பகுதி

### யாழ்ப்பாணம்

இரண்டாம்பிரிவு

**பாட்டு:-**

ஆனந்தி இரத்தினசபாபதி, சசிரேகா சச்சிதானந்தம், o சரோஜினி மருதபிள்ளை, o சந்திரவதி மருதப்பிள்ளை, சிவாஜினி சிவஞானசுந்தரம், தனுஷா பாலசிங்கம், பாலாம்பிகை திருநாவுக்கரசு, o ஸ்ரீ சுகந்தி பூபாலசிங்கம், ஜானகி பாலசுப்பிரமணியம், o சுப்பிரமணியம் மகேந்திரராசா, தளாயினி திருநாவுக்கரசு, o தனுஷா இராஜரட்ணம், ஞானகௌரி தங்கராஜா, ஞானகீதா தங்கராஜா, கிரோமினி இராசநாயகம், சகிலா நவரட்ணம், சுபேதினி சுந்தரலிங்கம், பத்மஸ்ரீ சிவலிங்கம், சோமாஸ்கந்தக்குருக்கள் ஸ்ரீ வத்ஸன், ஸ்ரீமாதங்கி ஏகாம்பரநாதன், ஸ்ரீஜனனி நடராசா.

**வீணை:**

o தளாயினி சண்முகநாதன், o உதிஸ்ரு துரைரத்தினம், வசந்தா சோமசுந்தரம், கேமா சோமசுந்தரம், உஷாதேவி சோமசுந்தரம்.

**வயலின்:-**

முரளசுந்தரம் நஞ்சன், றாபிஜோய் யோ. பிரான்சிஸ், சிராணி துரைலிங்கம் (மே. பா).

சாதாரணசித்தி

**பாட்டு:**

நித்தியானந்ததேவி மார்க்கண்டு, ஜெயறூபி ஜீவானந்தம், யசோதா தியாகராசா, ரவீந்திரன் சேனாதிராசா, சகிகா இரவீந்திரன், வித்யா தியாகராசா, நேசவந்தா கந்தையா, மீரா இக்கிரிட்கிசோலி, o ஹேமலதா பரமசிவம், பிறேமநிதி பொன்னுத்துரை, வசந்தி வைத்திலிங்கம், அன்னபூரணி கணேசசர்மா, றெஜியாரதி அந்தோனிப்பிள்ளை, நிலந்தினிதேவி குமாரசாமி, சிவானி பத்மநாதன், யுவனி செல்வராசா, ஹம்சத்வனி இரத்தினகோபால், சுகந்தி தில்லைச்சந்திரன், சிறீவித்யா சதானந்தவேல், வசந்தி சிவலிங்கம், மயூரன் குமாரசேகரம், ராதிக்கா காராளசிங்கம், f சந்தான சிவபாலன், கலைமகள் கந்தப்பு, அகிலா கனகராசன், ஷோபனா நந்தசாமி.

**வீணை:**

கிரிஜாம்பாள் தியாகராசா, முத்துலக்ஷ்மி சுந்தரம், கலாராணி அழகரட்ணம், தமயந்தி குலேந்திரன்.

**வயலின்:**

பரமநாதன் மகேஸ்வரன், o கனபத்மினி சிவரூபநாதபிள்ளை, பெலிக்ஸ் மேபின் இமனுவேல், தனலக்ஷ்மி தம்பிநாதன்.

(தொடரும்)

# 5,000 மாணவருக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி

[கொழும்பு]

இலங்கையிலுள்ள ஆறு பல்கலைக்கழகங்களிலும் இம்முறை 5 ஆயிரம் மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்களை பல்கலைக்கழக மானியக்குழு இவ்வார இறுதியில் அனுப்பிவைக்கும்.

கலை, வர்த்தகப் பிரிவுக்கே ஆகக்கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். பௌதிக விஞ்ஞானப் பிரிவுக்கு 545 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

வைத்தியபிரிவில் 400 மாணவர்களும் பொறியியல் பிரிவில் 375 மாணவர்களும் உயிரியல் விஞ்ஞானபிரிவில் 340 மாணவர்களும், பல்வைத்தியபிரிவில் 50 மாணவர்களும், மிருகவைத்தியப் பிரிவில் 30 மாணவர்களும், விவசாயத்துறைக்கு 135 மாணவர்களும் அனுமதிக்கப்படுவர்.

சட்டப்பிரிவில் 50 மாணவர்களும், கட்டிடக் கலைப்பிரிவில் 40 மாணவர்களும் அனுமதி பெறுவர்.

ஜி. சி. ஈ. உயர்தரபரீட்சையில் சித்திபெற்றும் பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறமுடியாத மாணவர்கள் விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவர். [இ]

# 29 கட்சிகள் தேர்தல் ஆணையாளரால் நிராகரிப்பு

[கொழும்பு]

29 புதிய அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

திரு. ரோகண விஜயவீராவின் தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியும் நிராகரிக்கப்பட்ட 29 கட்சிகளில் அடங்கும்.

ஜனாப் ஏ அஸீஸின் தலைமையிலான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஒன்றுமட்டுமே தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி உட்பட நிராகரிக்கப்பட்ட சில கட்சிகள் எதிர்வரும் உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுக்களாகப் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ]

கைத்தொழில் முயற்சிக்கு

# வங்கிக்கடன், தொழில்நுட்ப வசதிகளை பெற்றுத்தருவேன்

## உடுப்பிட்டி எம். பி. உறுதி

[யாழ்ப்பாணம்]

"இளைஞர்கள் வேலைவாய்ப்பை எதிர்பார்த்து தமது காலத்தை வீணாக்காமல் தத்தமது பிரதேசங்களில் உள்ள மூலதனங்களைப் பயன்படுத்தி தொழில் புரிய முன் வரவேண்டும். சிறிய கைத்தொழிற் சாலைகளை அமைப்பதன் மூலம் தொழில் வாய்ப்பைப் பெருக்கலாம். இதற்கான வங்கிக் கடன்வசதி, தொழில் நுட்ப வசதி ஆகியவற்றை பெற்றுத்தர நான் தயாரராக இருக்கிறேன்."

இவ்வாறு கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. கி. பூபாலன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. இராசலிங்கம் தொடர்ந்து பேசுகையில், என்னிடம் உதவி கோரி அநேகர் உத்தியோகம், இடமாற்றம் கோரியே வருகின்றனர். பொதுநோக்கத்திற்காக வருவோர் மிகக் குறைவே. தொகுதியின் அபிவிருத்திக்காக வருவோர் எவ்வித தயக்கமும் இன்றி என்னிடம் வந்தால் எவ்வித பாரபட்சமும் காட்டாமல் செய்து தர தயாராக இருக்கிறேன்" என்றார்.

திரு. கொற்றை கிருஷ்ணனந்தன் பேசுகையில், "கிராம அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களை விட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. எனவே நாம் கிராம அபிவிருத்திச் சங்கங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றார்.

ஆசிரியர் திரு. ஆ. கந்தையா, டாக்டர் க. வேலும் மயிலும், மு. நடேசன், பி. சிவபாதம் ஆகியோரும் உரையாற்றினர். திரு. கி. ஜெகதீஸ்வரன் நன்றி கூறினார். [கு-இ]

## இன்றைய திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமிகோவில் மகோற்சவம் 14ம் திருவிழாவாகிய இன்று காலை 9 மணிக்கு பூஜையாகி மஞ்சத்தில் உள்வீதிவலமாக வந்தும் மாலை 6-30 மணிக்கு பூஜையாகி மூஷிகம், அன்னம், மயில் வாகனங்களில் விநாயகர், சிவன், அம்மன், முருகன், சண்டேஸ்வரன் முதலான பஞ்சமூர்த்திகள் வெளிவீதிவலமாக வந்தும் காட்சிகொடுத்தருளுவார்கள்.

## இன்று காலை நடைபெறுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட சாரணர் கருத்தரங்கு இன்று காலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு த. மாணிக்கவாசகர் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

கல்லூரி அதிபர் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த சாரணத் தலைவர்கள், உதவிச் சாரணத் தலைவர்கள், மாவட்டச் சாரணத் தலைவர்கள், உபமாவட்ட இளைச்சங்க சாரண உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. [கொக்-நிரு]

## ஈழத்தமிழருக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டிருக்கின்றேன். முதலாளித்துவ வாதிகளால் எந்த நாட்டிலும் உள்ள தேசியப் பிரச்னைகளும் தீர்க்கப்பட்டதில்லை. அதற்குமாறாக அந்த நாடுகளில் கொலை, களவு, வாழ்க்கைப்பிரச்னை, நெருக்கடி, சுரண்டல் ஆகியவை தலைதூக்கியுள்ளதை நாம் பார்க்கின்றோம். புதிய சமசமாஜக் கட்சி இதற்கெதிராக சர்வதேச ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றுசேர்த்துப் போராட முயற்சி செய்கிறது.

"கடந்தகாலங்களில் தொழிலாள வர்க்கத்தை வழிநடத்திச் சென்ற சோசலிஸத் தலைவர்கள் தங்கள் சுயநலத்திற்காக இம்மக்களைச் சரியானபாதையில் இட்டுச்செல்லாததால் அவர்கள் விரக்தியடைந்து விட்டார்கள்.

"சோஸலிசத் தலைவர்களின் தவறான போக்கால் சிறுபான்மை மக்கள்கூட தனித்தனியாகப் பிரிந்து இயங்க ஆரம்பித்துவிட்டார்கள் இந்நிலை இலங்கையில் மட்டுமல்ல பிரித்தானியாவிலும் நீடிக்கிறது.

"முப்பது வருடங்களுக்கு முன்னர் பிரித்தானியதொழிற் கட்சி இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கியது. ஆனால் அன்று இருந்த சுதந்திரம்கூட இன்று இந்தியாவில் இல்லையே! ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சர்வதேச ரீதியாக போராடி தமது உரிமைகளைப்பெறக்கூடிய சோசலிச மார்க்ஸிஸ் ஆட்சியினை அமைக்கவேண்டும்" என்று கூறினார்.

கலாநிதி குமார் டேவிட் பேசுகையில்; "தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு, தமிழர்களுடையகையிலா அல்லதுஇராணுவத்தினுடைய கையிலா என்பதை தமிழ்மக்கள் சிந்திக்கவேண்டியநிலையில் இருக்கிறார்கள் என்றும் இன்று தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை இராணுவம்தான் நிர்ணயிக்கின்றதுபோல்காட்சி அளிக்கின்றது" என்றும் கூறினார்.

"தமிழ் மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விஷயங்களில் காட்டப்படும் மாற்றாந்தாய் மனப்பான்மைமாற வேண்டும். இவற்றையெல்லாம் போக்க இடதுசாரிகளுடன் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு போராடவேண்டும். நாம் இன்று ஈழநாட்டில் சிதறிச்சின்னாபின்னப்பட்டிருக்கும் இடதுசாரிகள் அனைவரையும் ஒன்றிணைத்து, இன்றைய முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசுக்கு எதிராகப் போராட எண்ணியுள்ளோம். முதலாளித்துவ, ஏகாதிபத்திய எதிர்ப் புசக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்துபோராட அனைவரையும் நேசக்கரம்நீட்டி அழைக்கின்றோம்" என்று கூறினார். (கொக் நிரு)

## கண்டெடுத்த இரு கூப்பன்கள்

அரிசிக் கூப்பன் புத்தகமொன்று கொட்டடி செல்லத்தம்பி என்பவரால் யாழ் நகரில் கண்டெடுத்து கொட்டடி சனசமூகநிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

கோண்டாவில் சந்தியில் கண்டெடுக்கப்பட்ட மற்றொரு கூப்பன் நயினாதீவைச் சேர்ந்த க. செந்திநாதன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## சிகரெட்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திசையில் இரண்டு சைக்கிளில் மூவர் வந்ததாகவும் ஒருவரின் கையில் றிவோல்வரும், மற்றுமொருவரின் கையில் கிறிஸ் கத்தியும் இருந்ததாகவும், தம்மை இடைமறித்து துப்பாக்கி, கத்திமுனையில் தம்மிடமிருந்த பணம் பறிக்கப்பட்டதாகவும் ஆறுமுகம் கந்தையா புகார் செய்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலைய சப்இன்ஸ்பெக்டர் ஜனாப்லாபிர் விசாரணை நடத்திவருகின்றார்.

# பரீத் நஸீரின் புதிய சாதனை முயற்சி

## ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

"யாழ்நகரிலுள்ள ஜின்னா மைதானத்தில் 116 மணித்தியாலங்கள் தொடர்ந்து 'டுவிஸ்ட்' நடனமாடி, யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியவர் ஜனாப் பரீத் நசீர். அவரின் முயற்சியைக்கண்டு முஸ்லிம் சமூகம் மட்டுமல்லாது, ஏனைய சமூகத்தவர்களும் அவருக்கு தங்களால் இயன்ற ஆதரவை நல்கினர்"

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இல்லத்தில் நடைபெற்ற 'டுவிஸ்ட்' நடன ஆலோசனைக் கூட்டத்தில், சட்டத்தரணியும், டுவிஸ்ட் அமைப்புக் குழுச் செயலாளர்களில் ஒருவருமான ஆர். எம். இமாம் பேசுகையில் கூறினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு திரு. வெ. யோகேஸ்வரன் தலைமைவகித்தார். லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்தவர்களும், பத்திரிகையாளர்களும், வர்த்தகத் துறையைச் சேர்ந்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர் ஆலோசனைக்குழுக்கூட்டத்தை ஜனாப் எம். ஈ. ஷாஹுல் ஏற்பாடு செய்திருந்தார்.

ஜனாப் பரீத் நசீர் பேசுகையில் கூறியதாவது: "சென்ற முறை நடனம் ஆடும்போது தமிழ், முஸ்லிம்மக்கள் இனமத பாகுபாடு இல்லாது எனக்கு ஆதரவு அளித்தனர். ஆனாலும் ஒரு சாதனையை நிலைநாட்டும் பொருட்டு இம்மாதம் 15ம் திகதி மீண்டும் 'டுவிஸ்ட்' நடனம் ஆடவிருக்கின்றேன். இம்முறை கட்டாயமாக 200 மணித்தியாலங்கள் ஆடி உலக சாதனையை நிலைநாட்டி நான் பிறந்த மண்ணிற்கும் எனது இனத்திற்கும் பெருமைதேடித் தருவேன்" என்று கூறினார்.

பின்வருவோர் 'டுவிஸ்ட்' நடன ஆலோசகர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

### ஆலோசனை குழுவினர்

போஷகர்; யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், தலைவர்: ஜனாப் எம். எஸ் அமானுல்லாஹ். இணைக் காரியதரிசிகள்: எம். ஈ. ஷாஹுல், சட்டத்தரணி ஆர். எம். இமாம். கமிட்டி உறுப்பினர்கள் திரு. க. சிவஞானம் (யாழ். மாநகர சபை விசேஷ ஆணையாளர்), டாக்டர் ஜே பி. வி. பிலிப், 'லயன்' ரி. நவரத்தினம் (டிரெக்டர் லயன்ஸ் கிளப்), எம். ஏ. வி, சலாம் (பாடசாலை பரிசோதகர்), கே. எம். தாஹா (உபதபால் அதிபர்), சு. தர்மலிங்கம், எஸ். எம். கோபாலரத்தினம், எம். எஸ். றஹீம் (வை. எம். எம். ஏ). திருமதி எம். எம். கவுது (தலைமையாசிரியை), திருமதி லீலா டரீமன், எஸ். டரீமன், எஸ். அன்வர், எம் எம் ஏ. காதர், எம். இக்பால், எஸ். எம். சுல்தான், எஸ். எச். கமால், எம். எல். கலீல், ஐ. ஷாஹுல் ஹமீது, எம். எஸ். தௌஹீத் [யாழ். முஸ்லிம் லீக்], எம். சாகுல்ஹமீது, சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன்.

## பாகிஸ்தான் வெற்றி

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வ '40 ஓவர்' கிரிக்கெட் போட்டியில், பாகிஸ்தான் கோஷ்டி 55 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கோஷ்டி '40 ஓவர்'களில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 164 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கைக் கோஷ்டி '40 ஓவர்'களில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 109 ஓட்டங்களைப் பெற்றது.

## மரண அறிவித்தல்

### பூசகர் வே. சினியர்

கரவெட்டி மேற்கு சகாதேவன் குடியிருப்பு ஞானவைரவர் கோயில் பூசகர் வே. சினியர் காலமாகிவிட்டார். இவர் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், வேலனின் [நிறைவேற்றுப் பொறியியலாளர் பகுதி நுணவில்] அருமைத் தந்தையாரும், ஆனந்தனின் மாமனாரும், கிட்டினர், மார்க்கண்டு, அன்பு ஆகியோரின் சகோதரரும், சின்னத்துரை [நகர சபை வல்வெட்டித்துறை]யின் பெரிய தகப்பனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக தன்னாலை மயானத்துக்கு இன்று (5-4-79) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 2077

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி கணபதிப்பிள்ளை

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி யோகேஸ்வரி கணபதிப்பிள்ளை [சந்திரா] காலமாகிவிட்டார். இவர் கணபதிப்பிள்ளை [தொழிற்சாலை அதிகாரி பசறகுறூப்]யின் அன்புமனைவியும், பாஷினி [வேம்படி மகளிர் கல்லூரி யாழ்], பாமினி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், அமரர் கந்தையா, திருமதி கந்தையாவின் மருமகளும், திருமதி சரோஜினி, சுசி (இலங்கை மின்சார சபை] ஆகியோரின் சகோதரியும், அமரர் ஏ சே ஆறுமுகம்பிள்ளை, பி [அதியட்சகர் மருதானை புகையிரத நிலையம்], திருமதி குழந்தைவேலு, திருமதி குகதாஸ் [சிங்கப்பூர்], திருமதி குமாரசாமி, செல்வி பி கந்தையா, செல்வி அகிலாண்டேஸ்வரி கந்தையா [அப்போதிக்கரி, புனர்வாழ்வு ஆஸ்பத்திரி], திருமதி தில்லையம்பலம், செல்வி என். கந்தையா [யாழ் தமிழ் திருக்குடும்ப கன்னியர் மடம்], விஜயரட்ணம் [லண்டன்] ஆகியோரின் மச்சாளுமாவார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று [5-4-79] வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அன்னாரது வாஸஸ்தலத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக, கொககுவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் 2078

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the Genecial Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu; Telephone: 389.